மாலை முரசு

பக்கங்கள் 17+3

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 29 வியாழக்கிழமை 13.03.2025 | அதிர்வு 222

## கச்சதீவு திருவிழா நாளை ஆரம்பம்



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி

03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தமிழரசை அழிக்க சிலர் சதித்திட்டம்!

## பதில் தலைவர் சி.வி.கே. பகிரங்கக் குற்றச்சாட்டு

(எஸ். நிதர்ஷன்)

“இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் பல்வேறு சதி வலைகள் பின்னப்படுகின்றன. அதிலும் தமிழரசுக் கட்சியை எப்படியாவது சிதைத்து அதனை உடைத்துக் கட்சியைப் பிளவு படுத்தி விட வேண்டும் என்ற நோக்குடன் சிலர் செயற்படுகின்றனர். அதையெல்லாம் தாண்டி நாம் முன்னேறுவோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02

## பட்டலந்த வதை முகாம் விவகாரம் போல்

# தமிழினப் படுகொலைக்கு எதிராக அநுர அரசின் நடவடிக்கை என்ன?

## தமிழரசுக் கட்சி கேள்வி

(எஸ். நிதர்ஷன்)

“பட்டலந்த விவகாரம் போன்று எத்தனை ஆயிரமாயிரம் சம்பவங்கள் எமது தமிழ் மண்ணிலே நடந்திருக்கின்றன. இந்தச் சம்பவங்கள் உங்களுக்குத் தெரியவில்லையா? இதற்கு என்ன நடவடிக்கையை நீங்கள் எடுக்கப் போகின்றீர்கள்?”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

04




# யாழில் 17 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும்

## அமைச்சர் சந்திரசேகர் நம்பிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான கட்டுப்பணம் செலுத்துவதற்காக தேர்தல்கள் அலுவலகத்துக்கு இன்று வருகை தந்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், சண்முகநாதன் ஸ்ரீபவனந்தராஜா மற்றும் தொகுதி அமைப்பாளர்கள், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் வருகை தந்திருந்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழரசை அழிக்க...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தற்போது புதிய தமிழரசுக் கட்சி உருவாக்கம் குறித்து பேசப்படுகின்றது. உண்மையில் அப்படியாக கட்சிக்குள் இருப்பவர்கள் யாரும் கருதவில்லை.

அப்படியான எண்ணங்கள் கூட அவர்களிடத்தில் இல்லை. ஏனெனில் கட்சியில் பலருடனும் இது தொடர்பில் பேசியிருந்தபோது அவர்கள் அனைவரும் இதனை மறுதலித்துள்ளனர்.

குறிப்பாக தமிழ் மக்களின் நீண்டகால பாரம்பரியக் கட்சியாக இருக்கின்ற இந்த தமிழரசுக் கட்சியை எப்படியாவது உடைத்துவிட வேண்டும் என்று விசமத்தனமான பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் கடந்த 75 வருட கால வரலாற்றில் சோரம் போகாத - ஊழலில் ஈடுபடாத - தமிழ் மக்களின் பாரம்பரியக் கட்சியாக இந்தக் கட்சியே திகழ்ந்து வருகின்றது.

இத்தகைய கட்சியை உடைக்கப் பலரும் பல சந்தர்ப்பங்களில் முயற்சி செய்திருந்தாலும் இது பலனளிக்காத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் ஜனநாயகத் தமிழரசு என்றும், புதிய தமிழரசு என்றும் புதிய புதிய பெயர்களைச் சொல்லிக்கொள்கின்றனர். அவ்வாறாகத் தமிழரசை உடைப்பவர்களுக்கு தமிழரசு என்ற சொல்லும் தேவைப்படுவது ஆச்சரியமானது.

ஆக மொத்தத்தில் தமிழரசை உடைக்கும் முயற்சி ஒருபோதும் நிறைவேறாது. ஆனாலும், தெற்கத்தேயே சிங்கள நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் உடைக்கும் முயற்சியை தொடர்ந்தும் செய்தாலும் இது பலனளிக்காது என்பதையும் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

மேலும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவராக நானும் பதில் பொதுச்செயலாளராக சுமந்திரனும் பதவிக்கு வருவதற்குப் புதிதாக ஒன்றும் செய்யவில்லை. யாப்பில் குளறுபடி செய்து இந்தப் பதவிகளுக்கு நாம் வரவில்லை.

எமது கட்சியின் யாப்புக்கமையத்தான் இப்போது அந்தப் பதவிகளை எடுத்திருக்கின்றோம்.

இவ்வாறான நிலைமைகள் இருக்கத்தக்கதாக மக்கள் மத்தியில் பிழையான தகவல்களைப் பரப்பி விசமத்தனமான பிரச்சாரங்களை சிலர் மேற்கொள்கின்றனர். அதுவும் இப்போது தேர்தல் காலம் என்பதால் இன்னும் இன்னும் அதிகளவில் போலிப் பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றனர்.

எனவே, தமிழரசைப் பிளவுபடுத்தும் நோக்கில் முன்வைக்கப்படும் பொய்ப் பிரச்சாரங்களை சரியான முறையில் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறாக தமிழரசை இலக்கு வைத்து அதை உடைக்க முயற்சிகள் எடுத்தாலும் அதையெல்லாம் தாண்டி நாம் முன்னேறுவோம்.

மாற்றான சிந்தனையில் பொறுப்பான அணுகுமுறையைப் பின்பற்றி அநேகமாக எல்லா இடங்களிலும் சபைகளைக் கைப்பற்றுவோம். ஆனாலும், ஆட்சியமைக்க தேவைப்படும் இடங்களில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடனும் பேசுவோம்.” - என்றார்.




# பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான கவனவீர்ப்புப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் பௌர்ணமி நாள் செயற்பாட்டுத் தொடர்ச்சியில் பெண்களுக்கு எதிரான அனைத்துச் சுரண்டல்களையும் முடிவுக்குக் கொண்டுவர மௌனத்தைக் கலைப்போம் எனும் தொனிப்பொருளில் மக்கள் கவனவீர்ப்பு செயல்வாதம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவன வீர்ப்புப் போராட்டப் பேரணி தந்தை செல்வா கலையரங்கு வரை சென்று மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்தது.










## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**கச்சதீவு...**

நாளைமறுதினம் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

ஆலயத்துக்குச் செல்லவுள்ள பக்தர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 4 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை அரச பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து குறிகட்டுவான் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

கச்சதீவுக்கான படகு சேவையானது குறிகட்டுவான் இறங்குதுறையில் இருந்து வெள்ளிக்கிழமை காலை 5 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிகட்டுவானில் இருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகுக்குரிய ஒரு வழிப் பயணக் கட்டணம் ரூ.1300 ஆகும்.

கச்சதீவுக்கு குழுவாக / தனியாக வருகை தரும் மக்கள் அவர்களது முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், வயது, பால்நிலை மற்றும் அவர்கள் பயணிக்கும் படகு இலக்கம், படகின் வகை, படகோட்டியின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகிய விவரங்களை இரண்டு பிரதிகளில் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிமாவட்டங்களில் இருந்து தமது சொந்தப் படகுகளில் திருவிழாவுக்குச் செல்வோர் தமது வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களில் தொடர்புகொண்டு உரிய கடற் பயணப் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்வதுடன் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கச்சதீவு உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு வெள்ளிக்கிழமை இரவு உணவு மற்றும் சனிக்கிழமை காலை உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாக உள்ளதால் மதுபானம் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட செயலர் அறிவித்துள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தமிழினப் படுகொலைக்கு...**

யாழ்ப்பாணம், நல்லூரடியில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“இப்போது பலரும் பேசி வருகின்ற பட்டலந்த விவகாரம் அந்தக் காலத்திலேயே மிகப் பெரியளவில் பேசப்பட்டது. அதாவது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இளமைக் காலத்திலே அதற்கும் அவருக்கும் தொடர்பு இருந்ததாகவே பேசப்பட்டு வந்தது.

அந்த ஆணைக்குழு அறிக்கை கூட இவ்வாறான விடயங்களை உள்ளடக்கியதாகவும் இதனை உறுதிப்படுத்தியும் இருக்கின்றது.

ஆனபடியால் அவர்களைப் பொறுத்தவரையில் இது காலங்கடந்தது என்றாலும் அதனைப் பகிரங்கப்படுத்தி உண்மையை வெளிக்கொண்டு வந்து அரசு அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது சரி என்றே நான் நினைக்கின்றேன்.

உண்மையைச் சொல்லப் போனால் இந்தப் பட்டலந்த படுகொலை விவகாரம் என்பது அந்த நாட்டிலே இருக்கின்ற அந்த மக்களுக்காக அங்க செய்கின்ற விடயம்.

ஆனால், தமிழர்களுக்கு என்ன நடந்தாலும் அது சரி என்று நியாயப்படுத்துகின்ற வேலையைத்தான் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் செய்து கொண்டு வந்திருக்கின்றன.

அதுதான் இவர்களது பொலிசியாகவும் அதாவது அவர்களது நிலைப்பாடாகவும் இருக்கின்றது. ஏனெனில் காட்சிகள் மாறுகின்றதே ஒழிய ஆட்கள் மாறவில்லை. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களது சிந்தனையில் மாற்றங்கள் ஏற்படாது.

இந்தப் பட்டலந்த விவகாரம் சம்பந்தமாக ஆட்சியாளர்களிடம் நாங்கள் ஏதும் கோரிக்கை வைக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. அது அவர்களே சண்டையிட்டுக் கொள்வார்கள். அப்படித்தான் இப்போது நடக்கின்றது. இதனைப் பற்றி சிங்கள அரசியல்வாதிகள் பேசிக்கொள்ளட்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவரும் சேர்ந்து இவரும் சேர்ந்து என அவர்கள் எல்லோருமாக இப்படி எத்தனை பட்டலந்தவை எமது மண்ணிலே நடத்தியிருக்கின்றார்கள்.

ஒரு பட்டலந்த பற்றி இப்போது அங்கு அவர்கள் பேசுகின்றார்கள். ஆனால், இப்படி எத்தனை ஆயிரம் பட்டலந்த கொடுமைகள் இங்கு நடந்திருக்கின்றன.

இங்கு எவ்வளவு பேர் கொடுமைப் படுத்தப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் கொல்லப்பட்டும் இருக்கின்றார்கள். அவை எல்லாவற்றுக்கும் விசாரணை நடத்தப்படுமா என்றால் இல்லை.

ஆக பட்டலந்த போல் பற்பல சம்பவங்கள் எங்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ளமைக்கு நீங்கள் என்ன நடவடிக்கையை எடுக்கப் போகின்றீர்கள் என்றும், உங்களால் ஏன் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் பல்வேறு கேள்விகளை நாங்கள் எழுப்பலாம். அதைச் செய்வோம்.” – என்றார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஊருக்கு உபதேசம்

'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி!' - என்று ஒரு பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

கல்வி அமைச்சுத் தொடர்பில் அந்த அமைச்சுக்குப் பொறுப்பாக இருக்கும் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் நிலைப்பாடும் அப்படித்தான் இருக்கின்றது போலும்.

இவ்வளவு காலமும் எதிரணியில் இருந்த போது கல்வித்துறை நடவடிக்கைகளில் - பாடசாலை செயற்பாடுகளில் - அரசியல்வாதிகள் நேரடியாகப் பங்குபற்றுவதைக் கடுமையாக எதிர்த்து வந்தது ஜே..வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி.

இப்போது அரசுக்கு வந்த பின்னர் - அதிகாரத்தை கையில் எடுத்த பின்னர் - பழைய கொள்கை நிலைப்பாட்டை இடையிடையே பிரதிபலித்தாலும், ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் அரசியல்வாதிகளின் பரவணிப் பண்பியல்பு அவர்களை விடுவதாக இல்லை.

பாடசாலை நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் பங்குபற்றுவது தொடர்பில் கல்வி அமைச்சர் என்ற முறையில் ஹரிணி அமரசூரிய பதவிக்கு வந்ததும் விடுத்த அறிவிப்பு இப்போது தலைகீழாக மாறிவிட்டது.

அவர் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் - செப்டம்பர் 26 அன்று பிரதமர் அலுவலகத்தில் இருந்து வந்த செய்திக் குறிப்பில் - பாடசாலை விழாக்களுக்கு அரசியல்வாதிகளை அழைப்பதை நிறுத்துமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுடனான சந்திப்பின்போது பிரதமர் அறிவுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

அதற்குப் பின்னரும் கல்வி அமைச்சர் என்ற முறையில் பாடசாலை நிகழ்வுகளில் பிரதமர் பங்கு பற்றி வந்தார். அதைத் தவறு என்று சொல்வதற்கு பெரிதும் இடமில்லை. ஆயினும் ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் ஆங்காங்கே தத்தமது பிரதேசங்களில் பாடசாலை நிகழ்வுகளில் அரசியல்வாதிகளாகப் பங்கு பற்றும் போக்குத் தொடர்வது குறித்துப் பல தரப்பிலும் அதிருப்தியும் விசனமும் தெரிவிக்கப்பட்டு வந்த சூழலில் இப்போது தமது முன்னைய அறிவிப்பிலிருந்து குத்துக்கரணம் அடித்திருக்கிறார் பிரதமர் ஹரிணி அமரசூரிய.

பாடசாலை விழாக்களில் பங்கேற்க அரசியல்வாதிகளை அழைக்க வேண்டாம் என்று கல்வி அதிகாரிகளுக்கு எந்த விதியும் விதிக்கப்படவில்லை என்று இப்போது நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் கூறுகின்றார்.

ஆயினும் பாடசாலை அமைப்புகளை அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று அவர் வலியுறுத்தினார். அத்தகைய கட்டுப்பாடு எதுவும் விதிக்கப்படவில்லை என்று கூறிய அவர், இதற்கு மாறாக, வேறுவிதமாகக் கூறப்படும் ஊடக அறிக்கைகள் தவறானவை என்றும் கூறினார்.

கல்வி அமைச்சர் என்ற முறையில் இத்தகைய தடையை அவர் விதித்துள்ள போதிலும், அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலை நிகழ்வுகளில் எவ்வாறு கலந்து கொள்கிறார்கள் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த போதே அப்படி ஒரு விதிமுறை ஏதும் விதிக்கப்படவில்லை என்று, தமது ஆரம்ப நிலைப்பாட்டுக்கு மாறான கருத்தை பிரதமர் முன் வைத்திருக்கின்றார்.

தாம் அதிகாரத்துக்கு வந்த கையோடு விதித்த கட்டுப்பாட்டை அவரே இப்போது மறுதலிக்கின்றார்...!



# 15 ஏக்கர் வேளாமையை சேதப்படுத்திய யானைகள்!

(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது கமநலச் சேவைகள் மத்திய நிலையத்தின் கீழ் உள்ள குடாக்கள்ளி மேற்கு கண்டத்தில் அறுவடைக்கு தயராக இருந்த சுமார் 15 ஏக்கர் வேளாமைகளை காட்டு யானைகள் நாசமாக்கியுள்ளன.

நேற்று (12) புதன்கிழமை காலை முதல் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் சாய்ந்தமருது கமநலச் சேவைகள் மத்திய நிலையத்தின் கீழ் உள்ள குடாக்கள்ளி மேற்கு கண்டத்தில் உள்ள வயல் வெளிகளில் நடமாடின.

இந்த நிலையில் அறுவடை செய்வதற்குத் தயாராக இருந்த சுமார் 15 ஏக்கர் வேளாமைகளை யானைகள் மேய்ந்து நாசம் செய்தன.

அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்களுக்கு மத்தியில் மிகுந்த செலவுடன் செய்கை பண்ணப்பட்ட வேளாமைகளை காட்டு யானைகள் அழித்துள்ளமை வேதனைக்கு உரியதென விவசாயிகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு பயிர்களை நாசம் செய்யும் யானைகளை விரட்டுவதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும்.மேலும், காட்டு யானைகளால் ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளையும் அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்றும்விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தமிழர்களின் உரிமைக் குரலான கமலினி செனவிரத்னவுக்கு அஞ்சலி!

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ் மக்களின் துயரத்துக்காக அயராது பாடுபட்ட மனித உரிமை ஆர்வலரான டாக்டர் பிரையன் செனவிரத்னவின் மனைவி கமலினி ஒரு ஊக்கக் குரலாகவும் ஆதரவின் தூணாகவும் எப்போதும் இருந்தவர்.

ஆஸ்திரேலிய பிரிஸ்பேனில் தமிழ் சமூக ஆர்வலரான திருமதி கமலினி செனவிரத்ன கடந்த மார்ச் 6 ஆம் திகதி மறைவடைந்தார். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அவரது அன்பான ஆதரவும், அவரது வசீகரமான குரல், அவரது தாராளமான விருந்தோம்பல் ஆகியவற்றை பிரிஷ்பேர்ன் தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

மிகக் குறிப்பாக இலங்கையில் உள்ள தமிழ் சமூகத்துக்கு அவர் காட்டிய உதவிகளை இங்கு வாழும் மக்கள் இலகுவில் மறந்துவிட மாட்டார்கள்.




அவரது அசைக்க முடியாத நம்பிக்கையும், பெரும் சவால்களை எதிர் கொண்டாலும், அவர் எப்போதும் நெகிழ்ச்சியுடன் இருந்தவர். இருண்ட தருணங்களில் ஒளியைக் கண்டுபிடித்து, அனைவருக்கும் பலம் மிகுந்த ஊக்கத்தின் தூணாக தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளை புரிந்து பணியாற்றினார்.

‘சிங்கள கொட்டி’ என இலங்கை அரசால் பறைசாற்றப்பட்ட டாக்டர் பிரையன் செனவிரத்னவின் மனைவிக்கு பிரிஷ்பேர்ண் தமிழ் சமூகம் தங்கள் அஞ்சலிகளைத் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழ் மக்களுக்கான மனித உரிமைகள் மற்றும் நீதிக்காக அயராது பாடுபட்ட டாக்டர் பிரையன் செனவிரத்னவுடன் அவரது மனைவி கமலினியும் இணைந்து பணியாற்றினார்.

கமலினி செனிவிரத்ன மண்ணிலிருந்து விடைபெறும் வேளையில், தமிழ் சமூகத்தின் குரலாக அவர் ஆற்றிய பணியைப் போற்றுவோம். அவர் இனி நம்முடன் இல்லாவிட்டாலும், அவரது ஆன்மா நம் இதயங்களில் என்றென்றும் வாழும் என்று பிரிஷ்பேர்ண் தமிழ் மக்கள் தங்கள் அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# மன்னாரில் இரண்டு சபைகளில் சுயேச்சையாக இளைஞர் குழு!

## கட்டுப்பணத்தைச் செலுத்தியது

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டியிட நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) இளைஞர் குழு ஒன்று மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

நானாட்டான் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஜி.எம்.சீலன் தலைமையிலான இளைஞர் குழு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை மற்றும் நானாட்டான் பிரதேச சபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# சம்மாந்துறை , நாவிதன்வெளி , இறக்காமம் பிரதேச சபைகளுக்கு கட்டுப்பணம் செலுத்தல்

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )**

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, நாவிதன்வெளி, இறக்காமம் பிரதேச சபைகளில் தனித்துப் போட்டியிடுவதற்காக அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூரால் நேற்று (12) கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை பிரதேச மத்திய குழு செயலாளர் அஸாறுடீன் சலீம் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறை பிரதேச மத்திய குழு உறுப்பினரும் ரிசாட் அன்ட் பிரதர்ஸ் அமைப்பின் ஸ்தாபக தலைவரும் அல் மனார் சமூக சேவை அமைப்பின் தலைவருமான கே.ஆர். எம்.ரிசாட் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

# 19 ஆயிரத்தி 500 மில்லி லீற்றர் கசிப்புடன் இருவர் வீரமுனையில்!



**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அலவக்கரை வீதியில் அமைந்துள்ளது வீடு ஒன்றில் கசிப்புடன் இருந்த குற்றச்சாட்டில் நேற்று (12) புதன்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவினரால் இருவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, சூட்சமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 19 ஆயிரத்தி 500 மில்லி லீற்றர் கசிப்பை மீட்டுள்ளனர். சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.

வீரமுனை 04 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஆண், வீரமுனை 01 பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பெண் ஆகிய இரு சந்தேக நபர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரிடம் இருந்து 13 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பும், மற்றவரிடம் இருந்து 6 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபகள் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைகளுக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது நடவடிக்கையானது, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம். நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என்.றிபாய்டீன் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மன்னார் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட தேசிய மக்கள் சக்தி கட்டுப்பணம் செலுத்தியது

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட தேசிய மக்கள் சக்தி நேற்று (12) புதன்கிழமை மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது. இளைஞர் மற்றும் விளையாட்டு விவகார அமைச்சின் மன்னார் மாவட்டஅமைப்பாளர் முஹமட் சாஜித் தலைமையில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

இதேவேளை, பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயக தேசிய கூட்டணியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் அஷேக் சதீக் முப்தி, முசலி பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# மன்னாரில் வடக்கு இப்தார் நிகழ்வில் ஆளுநர்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த வடக்கு மாகாண இப்தார் நிகழ்வு நேற்று புதன்கிழமை (12) மாலை மன்னார் எருக்கலம்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

சர்வமத தலைவர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் , சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் மன்னார் மாவட்ட செயலாளர் க. கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மன்னார் மடு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின்



பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஜ் இந்த நிகழ்வுகளுக்கான திட்டமிடல் மேற் பார்வைகளை முன்னெடுத்தார். மன்னார் எருக்கலம் பிட்டி மகளிர் கல்லூரி சமூகத்தினர் ஒழுங்கமைப்புக்கள் மேற்கொண்டனர்.





# கல்முனை வலய இப்தார் நிகழ்வு!

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை வலய உத்தியோகத்தர்கள், கல்முனை வலய அதிபர்கள், உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற வருடாந்த இப்தார் வைபவம் கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் பணிமனை கேட்போர் கூடத்தில் நேற்று (12) நடைபெற்றது.

இந்த நிகழ்வின் ரம்ழான் சிந்தனையை கல்முனை நகர் ஜும்மா பள்ளிவாசல் பேஷ் இமாம் எம். எச். எம். இர்பாத் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுக்குக் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார், மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்சின் பக்கிர், கல்முனை பிரதேசத்தில் அமைந்துள்ள திணைக்கள தலைவர்கள், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்கள், இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள், கல்முனை கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளர்கள், உதவிக் கல்வி பணிப்பாளர்கள், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், பிரதேச முக்கியஸ்தர்கள், கல்விமான்கள் ஊர்ப்பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இடம்பெற்ற இப்தார் நிகழ்வு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலைச் சமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு செவ்வாய்க்கிழமை அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உள்ளடங்கலாக அழைக்கப்பட்ட விருந்தினர்களும் கலந்து கொண்டனர்.

சமய, சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இந்த நோன்பு திறக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது அடம்பன் பள்ளிவாசல் பிரதம மௌலவி உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டனர்.



# ஒரு விசர் நாயால் கடியுண்ட 7 பேர் வைத்தியசாலையில்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை செந்நெல் கிராம பகுதியில் நேற்று (12) புதன்கிழமை விசர் நாய்க்கடிக்கு உள்ளாகி 7 பேர் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

3 வயது தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் இவ்வாறு விசர் நாய் கடிக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது, குறித்த பகுதி இளைஞர்களால் நாய் தாக்கப்பட்ட நிலையில் அது இறந்துள்ளது. நாயின் தலைப் பகுதி அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்குப் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், பிராந்திய தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஏ. சி. எம். பஸால், மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லாபீர் ஆகியோரின் ஆலோசனையில் அந்தப் பிரதேசத்திலுள்ள கட்டாக் காலி நாய்களுக்கு தடுப்பூசி வழங்கும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மன்னாரில் இலங்கை தமிழரசு கட்சி ஐந்து சபைகளுக்குக் கட்டுப்பணம்!



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட இலங்கை தமிழரசுக்கட்சி நேற்று புதன்கிழமை (12) மதியம் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலான குழுவினர் இந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.




# பெண் வைத்தியருக்கு நீதி கோரி திருகோணமலையிலும் ஆர்ப்பாட்டம்

(முஹம்மட் றிஸ்னாத்)

அநுராதபுரத்தில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட பெண் வைத்தியருக்கு நீதி கோரியும், அவருக்கு எதிராக இடம்பெற்ற குற்றச் செயலை கண்டித்தும் திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர்களும் நேற்று (12) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டம் நடத்திய வைத்தியர்கள் கறுப்புப் பட்டி அணிந்தும், பதாதைகளை ஏந்தியும் பாலியல் குற்றத்துக்கு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.










# சம்மாந்துறை வைத்தியசாலையிலும் வைத்தியர்கள் வேலைப் பகிஷ்கரிப்பில்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அநுராதபுரம் மருத்துவமனையின் மருத்துவர்களுக்கான விடுதியில் 32 வயதான பெண் மருத்துவர் ஒருவர் கத்தி முனையில் தவறான நடத்தைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

இதனைக் கண்டித்து நேற்று (12) புதன் கிழமை நாடு முழுவதும் வைத்தியர்கள் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட் டனர்.

இதற்கு அமைவாகச் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையாற் றுகம் வைத்தியர்களும் நேற்று காலை முதல் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடு பட்டனர்.

இதனால் வெளிநோயாளர்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர் கொண்டனர். அவசர சிகிச்சை பிரிவு செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# பனைவள பாதுகாப்புத் தொடர்பான விசேட கலந்துரையாடல் மன்னாரில்

(த.சுபேசன்)

மன்னார் மாவட்டத்தில் பனை வளத்தைப் பாதுகாத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் திங்கட்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவனின் பங்குபற்றுதலோடு இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் பனை சார் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி கலந்துரையாடலின் போது பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் பனங் கள்ளை மொத்தமாகக் கொள்வனவு செய்து அதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்காக உயிலங்குளம் பகுதியில் உள்ள போத்தலில் கள் அடைக்கும் நிலையத்தை உடனடியாக இயங்க வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கிலும் பனை வளத்தை பாதுகாக்கும் நோக்கிலும் தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக ஒரு மில்லியன் பனம் பழத்தை கொள்வனவு செய்ய முன்மொழியப்பட்டது. இதன் போது ஒரு பனம்பழத்தின் விலை 30 தொடக்கம் 40ரூபாவரை கொள்வனவு பெறுமதி காணப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

அதனைவிட மன்னார் மாவட்டத்தில் பனை சார் உற்பத்தியில் புதியவர்களை இணைப்பதுடன் பெண் தொழில் முனைவோரின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

விசேடமாகவீட்டுத்திட்டப்பயன்பாட்டுக்கான பனை மரப் பயன்பாடு, முதிர்ந்த மரங்கள் மற்றும் அபாயகரமான பனை மரங்களை அடையாளம் கண்டு மரத் தேவைப்பாட்டுக்குப் பயன்படுத்தல், அரச வீட்டுத் திட்டப் பயனாளிகள் தமது சொந்தக் காணியில் உள்ள பனை மரங்களை மரத் தேவைக்குப் பயன்படுத்தல், நெருக்கமாக உள்ளபனை மரங்களை பிடுங்கி இடைவெளிவிட்டு நடுதல் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

இதன்போது பனை அபிவிருத்திச் சபைத் தலைவரால் பனை வளத்தின் பெறுமதி தொடர்பாக மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் தெளிவூட்டப்பட்டது.

மக்களால் பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட சில குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு எதிர்காலத்தில் வினைத்திறனான சேவையை வழங்கத் தயாராக இருப்பதாக அவர் மேலும் உத்தரவாதம் அளித்திருந்தார்.

கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர், மன்னார் மாவட்டத்தின் மன்னார், முசலி, நானாட்டான், மடு, மற்றும் மாந்தை பிரதேசசெயலர்கள், பனை அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்கள், பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், பனை சார் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

# டாக்டர் ஸில்மியின் நரம்பியல் ஆய்வு சர்வதேச ரீதியில் பாராட்டுப் பெற்றுள்ளது

(றியாஸ் ஆதம்)

சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.பி.எம். முஹம்மட் ஸில்மி மேற்கொண்ட நரம்பியல் நோய்களின் சுமையை மதிப்பிடுதல் பற்றிய ஆய்வு நரம்பியல் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வெளிப்படுத்தி விருதை வென்று சர்வதேச தரத்தில் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

உலக நரம்பியல் சம்மேளனத்துடன் இலங்கை நரம்பியல் நிபுணர்கள் சங்கம் ஏற்பாடு செய்த நரம்பியல் ஆராய்ச்சி மாநாடு அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

பல்வேறு நாடுகளதும் வைத்தியநிபுணர்கள், மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் குறித்த ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டு சகலரதும் வரவேற்பைப் பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

அத்துடன் "கல்முனை சுகாதார மாவட்டத்தில் நரம்பியல் நோய்களின் சுமையை மதிப்பிடுதல்" எனும் தலைப்பிலான டாக்டர் சில்மியின் விருது வென்ற ஆய்வுக் கட்டுரை இலங்கை நரம்பியல் நிபுணர்கள் சங்கத்தின் - 2025 மாநாட்டின் ஆய்வுச் சுருக்க புத்தகத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.




சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவின் பொறுப்பதிகாரியான டாக்டர் முஹம்மட் ஸில்மி தலைமையிலான டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத், டாக்டர் ஏ.எப்.எப்.அஸ்மா ஆகியோர் கொண்ட குழுவால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஆய்வானது இலங்கையின் கிராமப்புற சுகாதார அமைப்புக்களில் கூட இருக்கும் மருத்துவ நிபுணத்துவத்தின் அளவை நிரூபிக்கும் வகையில் நரம்பியல் துறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கியுள்ளது.



# கிழக்கு மாகாண தாதியர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்

## கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண தாதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்று மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரட்ணசேகர உறுதியளித்தார்.

ஆளுநருக்கும் அகில இலங்கை தாதியர் சேவைகள் சங்கத்தினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று, நேற்று புதன்கிழமை (12) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் தாதியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தாதியர் சேவைகள் சங்கம் ஆளுநரிடம் முன்வைத்த போதே, அவற்றை தீர்ப்பதற்கு உடன்பாடு எட்டுப்பட்டது. இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் டி. ஏ. சி. என். தலங்கம, ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர். டி.ஜி.எம். கொஸ்தா மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்து கொண்டனர்.



# மூதூர் தள வைத்திய சாலையில் 24 மணி நேர பணிப்புறக்கணிப்பு

(முஹம்மது ஜிப்ரான்)

பெண் வைத்தியர் மீதான பாலியல் வன்கொடுமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று மூதூர் தள வைத்திய சாலையில் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை மேற்கொண்டனர் என்று மூதூர் தள வைத்திய சாலை வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் வைத்தியசாலையில் பெண் வைத்தியர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டதற்கு நீதி கிடைக்க வேண்டி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



# நடிகை சவுந்தர்யா மரணத்தில் மோகன் பாபுவுக்கு தொடர்பா?

## தெலுங்கானா பொலிஸ் நிலையத்தில் புகார்

நடிகை சவுந்தர்யாவின் மரணத்தின் பின்னணியில், நடிகர் மோகன் பாபுவுக்கு தொடர்புள்ளதா ? என விசாரணை நடத்த கோரி தெலுங்கானா மாநிலம் கம்மம் பொலிஸ் துணை ஆய்வாளரிடம் சமூக ஆர்வலர் ஒருவர் புகார் அளித்துள்ளார். இது தென்னிந்திய திரைத்துறையில் புயலை கிளப்பி உள்ளது.

தமிழ், தெலுங்கு, கன்னடம் என 1990 களில் முன்னணி நடிகையாக வலம் வந்தவர் நடிகை சவுந்தர்யா. குடும்பப்பாங்கான நடிகை என இவருக்கு ஒரு ரசிகர் பட்டாளமே இருந்தது. தமிழில் நடிகர் கார்த்திக் குடன் இவர் நடித்த பொன்னுமணி படத்தை தொடர்ந்து இவர் அருணாச்சலம், படையப்பா, காதலா காதலா, சொக்கத்தங்கம் என ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த் முன்னணி நடிகர்கள் அனைவருடன் நடித்து புகழ் பெற்றார்.

இதேபோன்று தெலுங்கிலும் இவர் சிரஞ்சீவி, வெங்கடேஷ், நாகார்ஜுனா, பாலகிருஷ்ணா, மோகன்பாபு என அனைத்து முன்னணி நடிகர்களின் படத்திலும் நடித்து புகழ் பெற்றார்.

இந்நிலையில் இவர் 2003 ஆம் ஆண்டில் உறவினர் ரகு என்பவரை



திருமணம் செய்து கொண்டார். பிறகு பா.ஜ.கவில் இணைந்தார்.

இந்நிலையில், கடந்த 17.4.2004 ஆம் ஆண்டு, தேர்தல் பிரச்சாரத்திற்காக நடிகை சவுந்தர்யா பெங்களூரில் இருந்து தெலுங்கானா மாநிலம் கரீம்நகருக்கு செஸ்னா-180 ரக சிறப்பு விமானத்தில் புறப்பட்டார். அவருடன் அவரது சகோதரர் அமர்நாத்தும் உடன் இருந்தார். புறப்பட்ட சிறிது நேரத்திலேயே அந்த விமானம், பெங்களூர் வேளாண் பல்கலை கழகத்தின், காந்தி க்ருஷி விஷன் கேந்திரா வளாகத்தில் தீப்பிடித்து விழுந்தது.

இந்த கோர விபத்தில் சவுர்யாவும், அவரது சகோதரர் அமர்நாத்தும் பரிதாபமாக உடல் கருகி உயிர் இழந்தனர். அந்த சமயத்தில் நடிகை சவுர்தர்யா கர்ப்பமாக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் திரையுலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த சம்பவம் நடந்து சுமார் 21 ஆண்டுகளாகிவிட்டன. இந்நிலையில், நடிகை சவுந்தர்யாவின் மரணத்தில் சந்தேகம் உள்ளதாக தெலுங்கானா மாநிலம், கம்மம் பகுதியை சேர்ந்த சமூக ஆர்வலர் சிட்டிமல்லு என்பவர் கம்மம் மாவட்ட ஆட்சியரிடமும், பொலிஸ் ஆணையரிடமும் புகார் மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில் சிட்டிமல்லு கூறும் போது, "ஹைதராபாத் சம்ஷாபாத் விமான நிலையம் அருகே நடிகை சவுந்தர்யாவுக்கு 6 ஏக்கர் நிலம் இருந்தது. இதனை நடிகர் மோகன்பாபு கேட்டார். ஆனால், அவருக்கு சவுந்தர்யா கொடுக்க மறுத்து விட்டார். இந்த தகராறு ஏற்பட்ட பின்னர், சவுந்தர்யா விமான விபத்தில் உயிர் துறந்தார். தற்போது அந்த இடம் நடிகர் மோகன்பாபு வசம் உள்ளது. இது எப்படி சாத்தியம் ? ஆதலால், நடிகை சவுந்தர்யாவின் மரணம் ஒரு சதித் திட்டமாக கூட இருக்க வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக நடிகர் மோகன்பாபுவை விசாரிக்க வேண்டும்" என்று புகார் மனுவில் கூறியுள்ளார்.

# மதுபான ஊழல் மூலம் தி.மு.க.வுக்கு 1,000 கோடி ரூபா கைமாறியது

## அண்ணாமலை குற்றச்சாட்டு

தமிழகத்தில் மதுபான ஊழல் மூலம் தி.மு.கவுக்கு 1,000 கோடி ரூபா கருப்பு பணம் கைமாற்றியுள்ளதாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கருத்து தெரிவிக்கையில்,

"மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவாக இதுவரை 10 லட்சம் கையெழுத்துகளைப் பெற்றுள்ளோம். மே மாதத்துக்குள் ஒரு கோடி கையெழுத்துகளைப் பெற்று விடுவோம்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ், தமிழகத்தில் மும்மொழி பயிலும் மாணவர்கள் 15.20 லட்சம் பேர் இருப்பதாகக் கூறியுள்ளார். இவர்கள் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில்தான் பயின்று வருகின்றனர். மெட்ரிக். பள்ளிகளிலும் மும்மொழி கற்பிக்கின்றனர்.

டில்லி, சத்தீஷ்கரில் மதுபான ஊழல், அந்த அரசுகளை வெளியேற்றி விட்டது. தமிழகத்தில் மதுபான ஊழலில் 1,000 கோடி ரூபா கருப்பு பணம் தி.மு.கவுக்கு கைமாறியுள்ளது. தி.மு.கவுக்கு மதுபானத்தைக் கொண்டுதான் பணம் கிடைக்கிறது. மதுபானம் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டுதான் தி.மு.கவினர் 2024 சட்டப்பேரவைத் தேர்தலின்போது செலவு செய்தனர். மறுபடியும் ஆட்சிக்கு வருவதற்கு மதுபானம் மூலம் கிடைக்கும் பணத்தையே பயன்படுத்துவார்கள்.

மும்மொழிக் கொள்கை அவசியமா, மும்மொழிக் படிப்பவர்கள் மட்டும்தான் அறிவு உள்ளவர்களா என்று அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கேட்டிருக்கிறார். அவரது மகன் இந்தியக் குடிமகனா, அமெரிக்க குடிமகனா? அவரது மகன் எந்தப் பள்ளியில் படிக்கிறான்? மூன்று மொழி சொல்லிக் கொடுக்கக்கூடிய பள்ளியில்



படிக்கிறான் என்றால், உங்களுக்கு அறிவில்லை என்று தானே அர்த்தம்? அமைச்சர்களின் குழந்தைகள், பேரக் குழந்தைகள் மும்மொழியில்தான் படிக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நியாயம், பொதுமக்களுக்கு ஒரு நியாயமா?

அரசுப் பள்ளியில் பயிலும் 52 லட்சம் பேர் மற்றும் தனியார் பள்ளியில் பயிலும் 56 லட்சம் பேருக்கு சமமான கல்வி கிடைக்க வேண்டும். ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வியை படியுங்கள் என்று பிரதமர் கூறியிருக்கிறார். இது தமிழை ஊக்கப்படுத்தக்கூடிய திட்டம்.

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் நாடாளுமன்றத்தில் பேசும்போது, 'பி.எம்.ஸ்ரீ திட்டம் குறித்து கனிமொழி எம்.பி. என்னிடம் பேசினார். அவருக்கு எல்லாம் தெரியும். அதை இங்கு சுட்டிக்காட்ட விரும்பவில்லை. அது நாகரிகமாக இருக்காது' என்று கூறினார். ஏற்கெனவே கனிமொழி எம்.பி.க்கு குடும்பத்தில் பிரச்சினை. அவர்கள் என்ன பேசினார்கள் என்பதைக் கூறினால், அவருக்கு கூடுதல் பிரச்சினை வரும் என்று கருதி, மத்திய அமைச்சர் சூசகமாக பேசியுள்ளார்." என்றார்.

## பாகிஸ்தான் ரயில் கடத்தல்:

# 30 மணி நேர மீட்பு நடவடிக்கை முடிவுக்கு வந்தது; 25 பேர் பலி

பலூச் விடுதலைப் படையினர் நடத்திய ரயில் கடத்தல் சம்பவம் 30 மணி நேரத்துக்குப் பின்னர் முடிவுக்கு வந்துள்ளதாக பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது.

இதில் ரயில் பயணிகளில் 21 பேரும், பாதுகாப்புப் படையினர் 4 பேரும் உயிரிழந்துள்ளனர் என தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"குவெட்டாவில் இருந்து பெஷாவார் நோக்கிச் சென்ற ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை பலூச் விடுதலைப் படையினர் வெடிவைத்து தடம்புரளச் செய்து பின்னர் கடத்தினர். இந்தத் தாக்குதல், கடத்தல் சம்பவத்துக்குப் பின்னால் ஆப்கானிஸ்தானில் இருந்து செயல்படும் தீவிரவாதக் கும்பல்கள் இருப்பதை உளவுத் துறை உறுதி செய்துள்ளது. இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசு இத் தாக்குதல் போன்று பாகிஸ்தானுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகள் அதன் மண்ணில் அரங்கேறாமல் தவிர்க்கும் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

தீவிரவாதிகளுடன் சண்டை தொடர்ந்த நிலையில், 30 மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் கடத்தல் சம்பவம் முடிவுக்கு வந்துள்ளது. இதில் ரயில் பயணிகளில் 21 பேரும், பாதுகாப்புப் படையினர் 4 பேரும் உயிரிழந்தனர். தற்கொலைப் படை தீவிரவாதிகள் உள்பட 33 தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்." என்று தெரிவித்துள்ளது.



முன்னதாக பாகிஸ்தானின் குவெட்டா நகரில் இருந்து பெஷாவர் நகருக்கு நேற்று முன்தினம் காலை ஜாபர் எக்ஸ்பிரஸ் பயணிகள் ரயில் புறப்பட்டது.

இந்த ரயில் பலுசிஸ்தான் மாகாணம், முஷ்கப் பகுதி சுரங்கப் பாதையில் வந்தபோது தண்டவாளம் வெடிவைத்து தகர்க்கப்பட்டது. இதன் காரணமாக ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டது.

அப்போது பலுச் விடுதலை படையை (பி.எல்.ஏ) சேர்ந்த தீவிரவாதிகள், ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை சிறைபிடித்தனர். ரயிலின் குறிப்பிட்ட பெட்டிகளில் பாகிஸ்தான் பாதுகாப்பு படை வீரர்களும் பயணம் செய்தனர். அப்போது அவர்களுக்கும் கிளர்ச்சிப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது. இதில் 30 பாகிஸ்தான் வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து 500 க்கும் மேற்பட்ட ரயில் பயணிகள், பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இந்த சம்பவம் உலக அளவில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து ரயிலில் உள்ள பிணைக் கைதிகளை காப்பாற்றுவதற்காக பாகிஸ்தான் இராணுவத்தினர் களத்தில் இறங்கினர். நேற்று 2 ஆவது நாளாக நடைபெற்ற மீட்புப் பணியில் இதுவரை 155 பொதுமக்களை பாதுகாப்புப் படையினர் மீட்டனர். பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் தீவிரவாதிகள் சிலரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், பலூச் விடுதலைப் படையினர் நடத்திய ரயில் கடத்தல் சம்பவம் 30 மணி நேரத்துக்குப் பின்னர் முடிவுக்கு வந்ததாக பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது. 33 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இராணுவம் அறிவித்துள்ளது.

# சுனிதா வில்லியம்ஸ் பூமிக்கு திரும்புவதில் மீண்டும் சிக்கல்!



சுனிதா வில்லியம்ஸ் பூமிக்குத் திரும்புவதில் மீண்டும் சிக்கல் நிலவுவதாக நாசா தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் "க்ரூ" 10 திட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப கோளாறு சரி செய்யப்பட்டால் இலங்கை நேரப்படி நாளை அதிகாலை 4.56 இற்கு விண்கலம் விண்ணில் செலுத்தப்பட வாய்ப்புள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

ஏவுதளத்தில் இருந்த இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால் இந்த தாமதம் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென் சூடானில் தரையிறங்கிய உகாண்டா நாட்டு இராணுவம்

கிழக்காபிரிக்க நாடான தென் சூடானில் உகாண்டா நாட்டுப்படையினர்கள் தரையிறக்கப்பட்டுள்ளனர் என உகாண்டாவின் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

தென் சூடானில் அந்நாட்டு ஜனாதிபதி சால்வா கீர் மற்றும் துணை ஜனாதிபதி ரெயிக் மச்சார் ஆகியோருக்கிடையிலான உறவில் விரிசல் உண்டானதால், மீண்டும் அங்கு மோதல் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அயல் நாடான உகாண்டாவின் இராணுவம் தென் சூடான் தலைநகர் ஜீபாவில் ஜனாதிபதி சால்வாவிற்கு உதவுவதற்காக தரையிறக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது





ஜனாதிபதி சால்வாவிற்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையும் உகாண்டா மீதான போராகக் கருதப்படும் என உகாண்டா இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

மேலும், தென்சூடானை தங்களுடைய நாடு போல பாதுகாப்போம் எனவும் அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பக்கம் 03

கனடா முரசு

வியாழக்கிழமை 13/03/2025

## ஒஷாவாவில் இடம்பெற்ற தீ விபத்தில் தாயும் மகளும்

கனடாவின் ஒஷாவா நகரில் இடம்பெற்ற பயங்கர தீ விபத்தில் தாய் ஒருவரும் அவரது 9 வயது மகளும் உயிரிழந்துள்ளனர்.

மிக்ரிகோர் வீதியில்

02




# கனடாவின் 24 ஆவது பிரதமராக மார்க் கார்னி நாளை பதவியேற்பு

**லிபரல் கட்சியின் மார்க் கார்னி நாளை வெள்ளிக்கிழமை தனது அமைச்சரவையுடன் இணைந்து கனடாவின் 24 ஆவது பிரதமராக பதவியேற்கவுள்ளார்.**

**லிபரல் கட்சித் தலைமை தேர்தலில் முதல் சுற்றிலேயே வெற்றி பெற்ற கார்னி, தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் இருந்து அதிகாரத்தை பெற்றுக்கொள்ள உள்ளார்.**

பிரதமர் மற்றும் கனடிய அமைச்சரவையின் பதவியேற்பு விழா ஒட்டாவாவில் உள்ள ரிடோ ஹால் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறும் என அளுனர் நாயகம் மேரி சைமன் அலுவலகம், உறுதி செய்துள்ளது.

லிபரல் கட்சித் தலைவராக தனது முதல் நாளான கடந்த திங்கள் கிழமை, கார்னி பிரதமர் அலுவலகத்திற்கு சென்று, அதிகார மாற்றம் தொடர்பில் ட்ரூடோவுடன் கலந்துரையாடினார்.

ஒட்டாவா மற்றும் அதன் வெளியே உள்ள முக்கிய அதிகாரிக

02

# ட்ரம்பின் வர்த்தக போருக்கு மத்தியில் கனடா செல்கிறார் மார்கோ ரூபியோ

கனடா மீது தொடர்ந்து வரி விதிப்புகளை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்து வரும் நிலையில், கடும் நெருக்கடிக்கு மத்தியில் அமெரிக்க வெளிவிவகார செயலாளர் மார்கோ ரூபியோ கனடாவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

கனடாவின் கியூபெக்கில் நடக்கும் ஏழுவர் குழு வெளிவிவகார அமைச்சர்களின் பேச்சுவார்த்தைகளில் ரூபியோ கலந்து கொள்கிறார்.

சவூதி அரேபியாவில் உக்ரைன் உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையை முடித்ததன் பின்னர், சவூதி துறைமுக நகரமான ஜெட்டாவிலிருந்து புதன்கிழமை அதிகாலை புறப்பட்டு கனடாவில் தரையிறங்குகிறார் என்றே கூறப்படுகிறது.

பெரும்பாலான அமெரிக்க நிர்வாகங்களில், ஜனாதிபதிகளும் மூத்த அதிகாரிகளும் கனடாவை தங்களின் முதன்மையான அண்டை நாடாக அடையாளப்படுத்தி வந்துள்ளனர்.

ஆனால் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும்

02








## ஒஷாவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

McGrigor Street உள்ள இரண்டடி மாடி வீட்டில் தீ பரவியது.

தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்த போது முழு வீடும் தீக்கிரையாக இருந்தது.

தீ விபத்து ஏற்பட்ட போது வீட்டில் நான்கு பேர் இருந்ததாகவும் இதில் இருவர் கொல்லப்பட்டதாகவும் 12 வயதான சிறுமியும் 56 வயதான நபரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

தீப்பரவலுக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் சந்திப்புகளை மேற்கொண்டு, அதிகார மாற்றத்தை வெற்றிகரமாகச் செய்ய அரசு தரப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்னதாக கனடா மற்றும் இங்கிலாந்து மத்திய வங்கியின் ஆளுநராக பணியாற்றியுள்ள கார்னி, தனது சொத்துகளை முழுமையாக ஒரு கண்காணிக்கப்படாத அறக்கட்டளைக்கு மாற்றியுள்ளார் என அவரது பேச்சாளர் தெரிவித்தார்.

நாளை வெள்ளிக் கிழமை ட்ரூடோ கவர்னர் ஜெனரலை சந்தித்து தனது பதவி ராஜினாமா செய்துவிடுவார்.

அதன் பிறகு, கார்னி பிரதமராக பதவியேற்பு சத்தியம் செய்து, உறுதிமொழி ஏற்பார் என அறி விக்கப்பட்டுள்ளது.

புதிய பிரதமர் தனது அமைச்சரவையைத் தேர்வு செய்து அறிவிப்பார்.

லிபரல் கட்சித் தலைமை போட்டியின் போது கார்னிக்கு ஆதரவு தெரிவித்த அமைச்சர்களில் முக்கியமானோர் முக்கியமான அமைச்சுப் பொறுப்புகளை தொடருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ட்ரம்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கு வந்ததன் பின்னரே, கனடாவை வம்பிழுப்பதும், அமெரிக்காவின் 51 ஆவது மாகாணம் என கேலி செய்வதும், கனடா பிரதமரை ஆளுநர் என கிண்டல் செய்வதுமாக இருந்து வருகிறார்.

அத்துடன், உலக அளவில் பிரபலமடையாத நாடு என்றும் குறிப்பிட்டு வருகிறார். ரூபியோ கனடாவுக்கு வந்து சேரும் அதே நாளில் தான் எஃகு மற்றும் அலுமினிய இறக்குமதி தொடர்பிலான ட்ரம்பின் 25 சதவிகித வரி விதிப்பு அமுலுக்கு வருகிறது.

செவ்வாயன்று கனடா மீதான வரி விகிதத்தை இரட்டிப்பாக்குவதாக ட்ரம்ப் அச்சுறுத்தினார், ஆனால் ஒன்ராறியோ மூன்று அமெரிக்க மாகாணங்களுக்கு மின்சாரம் மீதான கூடுதல் வரியை கைவிட ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து பின்வாங்கினார்.

இதனிடையே, கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலியைச் சந்திக்கும் போது வர்த்தக பதட்டங்கள் குறித்து விவாதிக்க இருப்பதாக ரூபியோ ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும், நாம் இணைந்து முடிக்க வேண்டிய விடயங்கள், தற்போது நாம் உடன்படாத விடயங்களால் எதிர்மறையாகப் பாதிக்கப்படாமல் இருக்க, முடிந்தவரை முயற்சிப்பது நமது கடமையாகும் என்றும் ரூபியோ குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்காவுக்கு எதிராக கனடா 20.7 பில்லியன் டொலர் வரிவிதிப்பு

அமெரிக்காவுக்கு எதிராக கனடா கூடுதலாக 20.7 பில்லியன் டொலர் வரியை விதித்துள்ளது.

கனடா, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 20.7 பில்லியன் டொலர் மதிப்புள்ள பொருள்களுக்கு கூடுதல் வரி (Retaliatory Tariffs) விதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உலக வர்த்தக முறைகளை அமெரிக்காவுக்கு சாதகமாக மாற்றும் நோக்கில் இரும்பு, அலுமினியத்தில் ஏற்கனவே விதித்திருந்த வரிகளை அதிகரித்துள்ளார்.

இதற்கு எதிராக கனடாவின் நிதி அமைச்சர் டொமினிக் லெப்லாங்க் பதிலடி நடவடிக்கையாக கனடா தனது பதிலடி வரிகளை அமுல்படுத்தும் என்று அறிவித்தார்.

கனடா, அமெரிக்காவிற்கு அதிக அளவில் இரும்பு மற்றும் அலுமினியத்தை வழங்கும் நாடாகும்.

இரும்பு பொருட்கள் மீது 12.6 பில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான வரி விதிக்கப்பட்டுள்ளது.

அலுமினியம் பொருட்கள் மீது 3 பில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான வரி விதிக்கப்பட்டுள்ளது.






கணினிகள், விளையாட்டு உபகரணங்கள், இரும்பு பொருட்கள் உள்ளிட்ட பிற பொருட்கள் மீது 14.2 பில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான வரி விதிக்கப்பட்டுள்ளது.இந்த வர்த்தக விவகாரம் கனடா - அமெரிக்கா உறவுகளை மேலும் கடுமையாக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இதேவேளை, கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, புதிதாக லிபரல் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் கார்னியிடம் அதிகாரத்தை ஒப்படைக்கத் தயாராகி வருகிறார்.

இதனிடையே, ட்ரம்ப் மீண்டும் தனது சமூக ஊடக பதிவில் “கனடா, 51 ஆவது அமெரிக்க மாநிலமாக மாற வேண்டும்” என விவகாரமான கருத்துக்களை பகிர்ந்துள்ளார்.



# அமெரிக்க மது பானங்களுக்கு தடை விதிக்கும் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய அரசாங்கம்

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண மதுபானக் கடைகளில் இருந்து அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அனைத்து மதுபானங்களையும் நீக்குவதாக முதல்வர் டேவிட் எ.பி. அறிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் கனடியப் பொருள்களுக்கு வரி விதிக்கப்பட்டமை மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கனடிய எதிர்ப்பு நிலைப்பாடுகளுக்கு பதிலடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி கனடிய நீர் குறித்து அதிக ஆர்வம் காட்டினால், அவருக்கு அவரது அமெரிக்க நீர் மதுவை வைத்துக்கொள்ள உதவுகிறோம் என முதல்வர் டேவிட் எபி நகைச்சுவையாக தெரிவித்துள்ளார்.

முன்னதாகவே, குடியரசு கட்சியினால் நிர்வாகம் செய்யப்பட்ட மாநிலங்களில் (Republican-controlled ‘red states’) தயாரிக்கப்படும் மதுபானங்களுக்கு பிரிட்டிஷ் கொலம்பியா தடை விதித்திருந்தது.

தற்போது அனைத்து அமெரிக்க மதுபானங்களையும் நீக்க முடிவு செய்துள்ளதாக பிரிட்டிஷ் கொலம்பிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மக்கள் அமெரிக்க தயாரிப்புகளைப் பார்ப்பதே வேண்டாம் என்பதே அவர்களின் உணர்வு என எபி குறிப்பிட்டார்.

மதுபான விநியோக குழுமத்திற்கு (Liquor Distribution Branch) அமெரிக்க மதுபானங்களை வாங்குவதை உடனடியாக நிறுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு சொந்தமான 200 மதுபானக் கடைகளில் இந்த ஆணை அமுல்படுத்தப்பட உள்ளது. பிரிட்டிஷ் கொலம்பிய தயாரிப்புக்களுக்கு நாம் முன்னுரிமை அளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.